THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" Sir, as a matter of information, I would like to mention to you, that I was present at the time in the other House. No reference was made to Sri Kosalram's seat or *his* vacancy or the tribunal. I think, Sir, he is making matters worse by expanding on it."

MR. SPEAKER :—" The hon. Member may give it in writing to me. I shall call for the official report and examine it. At the same time I may say that the hon. Member should not take cognizance of matters that have taken place in the other House."

SRI K. T. KOSALRAM :—" என்னுடைய பெயர் வந்ததாகச் சொல்லவில்லை. திருநெல்வேலியில் ஒரு மெம்பர் ஸ்தானம் காலியாகப் போகின்றது என்று சொன்னாரென்றுதான் இங்கு சொல்லுகிறேன். அந்த ஸ்தானம் எந்த ஸ்தானம் என்று நிச்சயமாக முதல் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? இதுபற்றி கனம் சுப்ரமணியம் கோர்ட்டுக்கு ஏதாவது உத்தரவு போட்டிருக்கிறாரா ? இவ்வாறு இந்தச் சபையில் பேசுவது கண்டெம்ட் அப் கோர்ட் ஆயிற்றே ? கண்டெம்ட் அப் தி ஹவுஸ் அல்லவா ? நான் 6 வருஷமாக இந்த அசெம்பிளியில் இருந்ததற்காக இதைப்பற்றி சொல்ல உரிமையில்லையா ? கனம் சபைத்தலைவர் அவர்கள் இந்த விஷயத்தில் பாரபட்சமின்றி ஒத்திப்போடாமல் இந்த முக்கியமான பிரச்னையை விவாதத்திற்குக் கொண்டுவரவேண்டும். நானும் கன்வின்ஸ் (convince) படுத்தத் தயாராக உள்ளேன். இதுபற்றி உங்கள் அறைச்கு வந்தும் சமர்பிக்கின்றேன்."

MR. SPEAKER :—" வரும்பொழுது பிரிவிலெஜ் மோஷனை எழுதிக் கொண்டு வாருங்கள்."

V.—PRIVILEGE MOTION *RE* SRI KOSALRAM'S SPEECH PUBLISHED IN THE *DINAMANI*—DISCUSSION *RE*.

SRI A. SAMBASIVAM :—" 23-12-53-ல் இந்த சபையில் பேசியதை சென்னையில் வெளியாகும் ஒரு தினசரி செய்தித்தாள் திருத்தி வெளியிட்டதற்காக அதன்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னேன். கனம் சபைத் தலைவர் அவர்கள் அது விஷயமாக என்ன செய்தார் ? அதன் முடிவு என்னவாயிற்று ? என்பதை தெரிந்துகொள்ள விரும்புகின்றேன், தாங்கள் அதைத் தெரிவிப்பதாகவும் சொன்னீர்கள். அப்படியிருந்தும் இன்னும் ஒன்றும் தெரிவிக்க வில்லையே என்று கேட்கின்றேன்."

SRI S. SWAYAMPRAKASAM :—" Sir, the hon. Member is referring to the privilege motion moved the other day. The Speaker said that he would correspond with the editor and inform the House the result."

MR. SPEAKER :—" Yes, the editor has been addressed and I am awaiting his reply. As soon as it is received, I will inform the House."